**O.S.No. 260/2018**

**PW 2:** கவிதா தேதி 18.02.2026

வாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

என் அப்பாவின் பூர்வீகம் ஓடத்துறை கிராமம். என் அப்பாவிற்கு நானும் என் அண்ணன் சதீஷ்குமாரும் வாரிசுகள். என் அண்ணன் **BA** படித்திருந்தார். என் அண்ணன் என் அப்பாவுடன் விவசாயம் செய்து வந்தார். என் அப்பாவின் வியாபாரத்தையும் பார்த்து வந்தார். 2005 ல் அவருக்கு சாலை விபத்து ஏற்பட்டதில் 2011 ல் இருந்து உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தார். 2001 ல் அவருக்கு திருமணம் ஆனது. திருமணத்திற்கு பின்னிட்டு என் அண்ணனும் அவருடைய மனைவியும் அப்பாவுடன் குடியிருந்தார்கள். என் அப்பாவிற்கு பூர்வீக சொத்து இருந்தது. அதை நானும் என் அப்பா என் அண்ணன் ஆகியோர் பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை. எங்கள் மூவருக்கும் பூர்வீக சொத்தில் தலா 1/3 பங்கு பாத்தியம். என் பெற்றோர் இறந்து விட்டார்கள். பூர்வீக சொத்து தவிர என் அப்பாவிற்கு தனிப்பட்ட சொத்துகளும் இருந்தது. தற்போது எந்த சொத்துகளும் இல்லை. என் அண்ணனுக்கு 2 குழந்தைகள் 1 ஆண் 1 பெண். என் அண்ணன் உயிருடன் இருக்கும் வரை குழந்தைகளையும் குடும்பத்தையும் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. என் பெற்றோர் தான் பராமரித்து வந்தார்கள். சுதா என்ன வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்ன சொத்தின் பேரில் பரிகாரம் கேட்டிருக்கிறார் என்று எனக்கு தெரியும். சுதாவின் அப்பாவிற்கு பூர்வீக சொத்துகளா அல்லது தனிப்பட்ட சொத்துகளா என்றால் பூர்வீக சொத்துகள். பூர்வீக சொத்துகள் சம்மந்தப்பட்ட ஆவணங்களை பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. சுதாவிற்கு அவருடைய அம்மாவும் உடன் பிறந்தவர்களும் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறாரா என்றால் கொடுத்திருக்கிறார். அந்த சொத்து எந்த ஊரில் எவ்வளவு விஸ்தீரணம்

என்றால் ஈரோட்டில் குமலன்குட்டையில் உள்ளது. அது காலி மனையா அல்லது விவசாய நிலமான என்றால் காலி மனை. எந்த வருடம் தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்தார்கள் 2014 ல் எழுதி கொடுத்தார்கள். தானசெட்டில்மென்ட் நடைமுறை படுத்தப்பட்டு வாதி வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து கொண்டாரா என்றால் வாதி அனுபவித்து வந்த விவரம் தெரியும் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து கொண்டாரா என்று தெரியாது. நாளது வரை மேற்படி தானசெட்டில்மென்ட் சொத்து வாதி பெயரில் உள்ளது தெரியுமா என்றால் 2018 ல் நகல் எடுத்த பார்த்த போது தான் தானசெட்டில்மென்ட் பத்திரம் வாதி பெயரில் இல்லை என்றும் அவருடைய தம்பி குமரேசன் பெயரில் இருந்தது தெரிய வந்தது. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு 1 மாதத்திற்கு முன்பாக நகல் எடுத்து பார்க்கப்பட்டது. சுதாவின் வழக்கறிஞர் மற்றும் அவரது உறவினர்கள் நகல் எடுத்து பார்த்தார்கள். நான் நகல் எடுக்க போகவில்லை. வாதியின் தம்பி குமரேசன் பெயரில் ஆவணங்கள் இருப்பதை தெரிந்த கொண்டேன். வாதியின் தம்பி பெயருக்கு வாதி தானசெட்டில்மென்ட் எழுதி கொண்டார் என்று எனக்கு தெரிய வந்தது. தானசெட்டில்மென்ட் பத்திர தேதியன்று நான் பதிவாளர் அலுவகத்திற்கு சென்று இருந்தேனா என்றால் இல்லை. அன்று தேதியில் பத்திர அலுவலகத்தில் என்ன நடந்தது என்று நேரடியாக தெரியாது. அன்றைய தேதியில் மேற்படி தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதிய இடத்தில் வாதியுடன் அவர் கணவர் சதீஷ்குமார் உடன் இருந்தார் என்று தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. கேள்விபட்ட வகையில் என்னுடைய அண்ணன் மது போதையில் உடன் இருந்ததாக சொன்னார்கள். என் அண்ணனும் தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் சாட்சியாக கையெழுத்து போட்டார் என்றால் தெரியாது. 2018 ஆவணங்களை எடுத்து பார்த்ததில் நான் படித்து பார்க்கவில்லை. அந்த ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெத்திட்டுள்ளார்கள் என்று தெரிந்து கொள்ளவில்லை. அந்த ஆவணம் எந்த சர்வே எண் விஸ்தீரணம் கொண்டு எழுதப்பட்டது என்று தெரியாது. அன்றைய தேதியில் எத்தனை ஆவணம் அவர்களுக்கிடையே ஏற்பட்டது என்றால் 6 ஆவணம்

என்று கேள்விபட்டேன். 6 ஆவணங்களையும் நான் படித்து பார்க்கவில்லை. என் அண்ணன் 5.9.2020 ல் இறந்தார். பாகப்பிரிவினை பத்திரம் எழுதுவதாக சொல்லி தானசெட்டில்மென்ட் எழுதி வாங்கிவிட்டார் என்று சொல்கிறேன். என் அப்பா சொத்தில் என் அண்ணன் குழந்தைகளுக்கு பங்கு கொடுக்க கூடாத எண்ணத்தில் என் அண்ணியின் பெற்றோர் சொத்தில் பங்கு கோர சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணனுக்கு போதை ஒழிப்பு மறு வாழ்வுமையத்தில் சிகிச்சை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. என் அண்ணனுக்கு மது பழக்கம் இருப்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வாதி தன்னிட்சையாக அவருடைய தம்பிகளுக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறார் என்றும் அது மோசடியான பத்திரம் அல்ல என்றும் தற்போது வழக்கிற்காக வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணனுக்கு குடிபழக்கம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் அண்ணன் தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் சாட்சி கையெத்திட்டுள்ள நிலையில் மெற்படி பத்தி ரம் குறித்து என் அண்ணிக்கு தெரியும் என்றும் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் அடிப்படையில் 4 ம் பிரதிவாதி கிரையம் வாங்கி இருக்கிறார் என்றும் அக்கிரையம் வாதியை கட்டுப்படுத்தும் என்றும் அச்சொத்தில் 4 மாடி கட்டிடம் கட்டி 4ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றும் வாதி சுவாதீனத்தில் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.